வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   27.09.2024 வெள்ளிக்கிழமை   இதழ் : 271   பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# சங்கு சின்னத்தில் களமிறங்குகிறது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு

## முடிவுக்கு இரு நாள் அவகாசம் கோரும் சிவில் சமூகம்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 27

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடுவதென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. எனினும், தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க தமக்கு இரண்டு நாட்கள் அவகாசம் வழங்குமாறு சிவில் சமூகம் கேட்டுள்ளது.**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், சிவில் சமூகத்துக்கும் இடையே நேற்று கலந்துரையாடல் நடந்தது.

நேற்று முன்தினம் இந்த கலந்துரையாடல் ஏற்பாடாகியிருந்தது. கலந்துரையாடலுக்காக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சென்றிருந்தனர். எனினும் சிவில் சமூகம் இக்கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை.

நேற்றுமுன்தினம் அவர்கள் கலந்துரையாடலுக்கு வருவதாக கூறியிருந்தனர்.

நேற்றைய கலந்துரையாடலில், எதிர்வரும் பொதுத்தேர்தலில் சங்கு சின்னத்தில் தாம் போட்டியிடுவதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். இதில் சிவில் சமூகத்தினருக்கு ஆட்சேபனையிருக்கவில்லை.

எனினும், பொதுத் தேர்தலில் போட்டியிடுவது, பிரசாரத்தில் ஈடுபடுவது உள்ளிட்ட ஏதாவதொரு நடவடிக்கையை மேற்கொள்வதா என இதுவரை தீர்மானிக்கவில்லை என அவர்கள் கூறினர்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதா என்பதை தீர்மானிக்க தமக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தேவையென சிவில் சமூகத்தினர் குறிப்பிட்டனர்.

11

# புதிய ஜனாதிபதிக்கு உலக வங்கியும் ஆதரவு

கொழும்பு, செப். 27

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உலக வங்கி குழுமம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய வலயத்தின் தலைவர் மார்டின் ரயிஸர், சர்வதேச நிதி கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலய உப தலைவர் ரிகார்டோ புலிட் ஆகியோர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தொடர்ந்தும்

11

# பொது தேர்தலையும் சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு தாருங்கள்!

## தேர்தல்கள் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, செப். 27

ஜனாதிபதித் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதை போன்று பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு அரச துறைகளினதும் நாட்டு மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில்

11

# கொக்குத்தொடுவாய் புதைகுழி: இறுதி அறிக்கை நீதிமன்றிடம்!

## இலக்கத் தகடுகளின் இலக்கங்களை பகிரங்கப்படுத்த நீதிமன்று உத்தரவு

முல்லைத்தீவு, செப். 27

கொக்குத்தொடுவாய் புதைகுழி இறுதி அறிக்கை நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், இந்தப் புதைகுழி 1994 - 1996 ஆண்டு காலப்பகுதிக்குள் இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி. கே. நிரஞ்சன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு நேற்று வியாழக்கிழமை நீதிமன்றில் எடுத்து கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தவை வருமாறு,

11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# இராணுவ புலனாய்வு பிரிவினரே விசாரணையை திசைதிருப்பினர்!

## சி. ஐ. டி. முன்னாள் பணிப்பாளர்

கொழும்பு, செப். 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை இராணுவ புலனாய்வு பிரிவினரே தவறாக வழி நடத்தினர். வவுணதீவு பொலிஸார் படுகொலைகளை புலிகளே செய்தனர் என்று கூறி அவர்கள் 4 தடவைகள் திசை திருப்பினர் என்று குற்றப் புல னாய்வு பிரிவின் முன்னாள் இயக்குநர் ஷானி அபேசேகர தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியவின் நூல் வெளியீட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட தகவல்களை தெரிவித்தார்.

மேலும், விசாரணைகளின் முக்கிய தருணங்களின்போது

11



படம் : ஐ. சிவசாந்தன்

# தியாக தீபம் திலீபனுக்கு எழுச்சிபூர்வமாக அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப். 27

தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை எழுச்சிபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தேசங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை

11

# அரசியல் நிபந்தனையுடன் இலங்கைக்கு உதவவில்லை

## இந்திய வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டு

நியூயோர்க், செப். 27

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது, வழங்கிய ஆதரவில் எந்தவொரு அரசியல் நிபந்தனைகளும் இல்லை என என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியா தனது அயல் நாட்டின் அரசியல்

11

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு திங்களன்று!

கொழும்பு, செப். 27

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தரா தர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

முடிவுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு

11

# வாக்காளர் தொகையில் ஏற்பட்ட குறைவே யாழ்.மாவட்ட எம்.பிக்கள் குறைய காரணம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

வாக்காளர்களின் தொகையில் ஏற்பட்ட குறைவே யாழ்ப்பாண மாவட்டத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைய காரணம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்

11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபத்தின் நினைவேந்தல் பதிவுகள்









தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றபோது...! (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## யாழ். - மன்னார் பேருந்து சேவை; அரச சேவையினர் பெரும் அவதி!

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் - மன்னார் பேருந்து சேவை போதமையால் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக வாரத்தின் முதல் அலுவலக நாளானபிரதி திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமையில் தாங்கள் அதிக நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் யாழ்ப்பாணம் - மன்னார் வீதியூடாக பயணிக்கும் பேருந்துகளில் சிப்பியாறு புனித தலத்துக்கு வழிபாட்டுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்திரளான பக்தர்கள் பயணிக்கின்றனர். இதனால், ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், புதிய நியமனங்களும் வடக்கில் கூடுதலாக மன்னார் மாவட்டத்துக்கு வழங்கப்படுவதால் அரச ஊழியர்களும் அதிகமாக தினமும் பயணம் செய்கின்றனர். எனவே, இந்த இரு தினங்களிலாவது காலை வேளைகளில் மேலதிகமாக ஒரு பேருந்து சேவையை அதிகரிக்குமாறு இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய சேவையிடம் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

## பக்கவாத தினத்தை முன்னிட்டு கூடைப்பந்தாட்ட திருவிழா

யாழ்ப்பாணம், செப். 27

உலக பக்கவாத தினத்தை ஒட்டி விழிப்புணர்வு பிரசாரத்தை ஏற்படுத்தும் விதமாக மகளிர் கூடைப்பந்தாட்ட திருவிழா நடைபெறவுள்ளது.

வட மாகாண பக்கவாத விழிப்புணர்வு குழுவும் ஸ்புட்னிக் விளையாட்டு கழகமும் இணைந்து நடத்தும் இந்த கூடைப்பந்தாட்ட திருவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பழைய பூங்கா வீதியிலுள்ள ஜே. டி. பி. ஏ. திடலில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயிர் வேதியியல் தலைவர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக மகளிர் விவகார அமைச்சின் செயலர் பி. வாகீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ)

நீர்வேலிப் பகுதியில்

## மஞ்சள் தூளில் கலப்படம் 75 ஆயிரம் ரூபாய் அபராதம்!

யாழ்ப்பாணம், செப். 27

மஞ்சள் தூளில் கலப்படம் செய்து விற்பனை செய்தவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையிலான குழு அண்மையில் பரிசோதனையில் ஈடுபட்டது.

இதன்போது, நீர்வேலியிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் பெறப்பட்ட மஞ்சள் தூள் பைக்கெற்றுகள் கொழும்பிலுள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் மஞ்சள் தூளில் கோதுமை மா கலக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பான அறிக்கை கடந்த திங்கட்கிழமை பொதுச் சுகா தார பரிசோதகருக்கு கிடைத்தன. இதைத் தொடர்ந்து அந்த அறிக்கை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்றைய தினமே அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட மஞ்சள் தூள் உற்பத்தியாளர், விநியோகதஸ்தர், விற்பனையாளர் ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார் நீதிவான்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 27.09.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுரவை நம்புதல்?

உலகத் தமிழர் பேரவை அநுரவின் மீது நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றது. முன்னர் ரணில் விக்கிரமசிங்கவின் மீது நம்பிக்கை வெளியிட்டிருந்தது. தற்போது அநுரவின் மீது நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றது. நம்பிக்கை வெளியிடுவது பிரச்னைக் குரியதல்ல ஆனால், நம்புவதற்கான அடிப்படை என்ன என்பதுதான் முக்கியமானது. அடுத்தது, நம்பிக் கொண்டிருப்பது மட்டும்தான் விடயமா என்பதையும் நோக்க வேண்டும்.

அநுரகுமார திஸநாயக்க வித்தியாசமான நிலைப்பாடுகளை முன்வைக்கின்றார். அவரிடம் இனவாதம் வெளிப்படவில்லை ஆனால் அவரால் அதிகம் செய்ய முடியுமா - அப்படியே செய்ய முடியுமென்றாலும் எதைச் செய்ய முடியுமென்பதுதான் கேள்வி.

அநுரகுமார திஸநாயக்க சிங்கள பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றிபெற்றிருக்கின்றார். கோட்டாபய முன்னர் ஐம்பது விகிதத்தை தாண்டிப் பெற்ற வாக்குகளின் மூலம் தமிழ் வாக்குகள் தேவையற்றவை என்பதை நிரூபித்திருக்கின்றனர். தற்போது அதனையே அநுரகுமார திஸநாயக்க வேறுவிதமாக நிரூபித்திருக்கின்றனர். தமிழ் வாக்குகள் இல்லாமலேயே அநுர அவரது வெற்றியை நிரூபித்திருக்கின்றார். ஆனால், ஐம்பது விகிதத்தை தாண்டிய ஜனாதிபதியாக அவரால் வரமுடியவில்லை. இந்தப் பின்புலத்தில் அவர் அரசியல்ரீதியில் விடயங்களை முன்னெடுக்கும் வல்லமையுள்ளவாராக இருப்பதற்கான வாய்ப்பில்லை. இவ்வாறானதொரு சூழலில் அநுரவை நம்புவது என்பது தேவையற்ற ஒன்று. ஆனால், அநுரவுடன் உரையாடுவதில் தவறில்லை. அதிகாரத்தில் இருக்கும் எவருடனும் உரையாடுதல் பிரச்னையில்லை.

அநுரகுமாரவின் அரசியல் ஆரம்பம் சிக்கலானது. 1971 மற்றும் 1989 காலப்பகுதியில் அவரது அமைப்பின் நிலைப்பாடும் செயல்பாடுகளும் சிக்கலானது. தமிழர் விரோதப் போக்கும் அவரது அரசியலின் அங்கமாக இருந்தது. இப்போதைய அநுர முன்னைய அநுர இல்லை - அவரது கட்சியும் முன்னைய நிலைப்பாட்டில் இல்லை. ஆனாலும் அவர்களது இரண்டாம் மூன்றாம் மட்ட பிரிவுகள் எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கின்றன - அவைகள் எந்தளவுக்கு ஒத்துப்போகும் - உடன்பட மறுக்கும் என்பதெல்லாம் இப்போதைக்கு ஊகிக்க முடியாது. எனவே ஓர் ஆட்சியாளரை அளவுக்கதிமாக நம்பவும் வேண்டியதில்லை - அதற்காக விரோதிக்கவும் வேண்டியதில்லை.

உலகத் தமிழர் பேரவை போன்ற புலம்பெயர் அமைப்புகளுக்கு அரசியல் யதார்த்தமும் புரியாது - அதற்கான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொள்வதில்லை. முன்னர் மைத்திரி - பின்னர் ரணில் - இப்போது அநுர. இப்படியாக நம்புவதில் ஒரு புத்திசாதுரியமும் இல்லை மாறாக - அரசியல் அறியாமைதான் உண்டு.

# தியாக தீபம் திலீபனின் நினைவு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, செப். 27

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நேற்று தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு, தமிழ் அரசு கட்சியின் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழ் அரசு கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)




## மன்னார் சிப்பியாறில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

மன்னார், செப். 27

மன்னார் இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பியாறு பகுதியில், குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தோனியார் ஆலய வளாகத்தின், பின் பகுதியில் உள்ள சிற்றாலயத்துக்கு முன்பாக குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர், உயிலங்குளம் முதலைக்குத்தி பகுதியை சேர்ந்த 45 வயதான அந்தோனி தெய்வீகன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற இலுப்பைக் கடவை பொலிஸார், சடலத்தை பார்வையிட்டனர்.

அதன் பின்னர், மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பா.பிரபா நந்தன், சடலத்தை பார்வையிட்டதோடு, சடலத்தை மீட்டு, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

அதற்கமைய, சடலம் மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## கிளிநொச்சி தர்மபுரத்தில் மரக்கடத்தல் முறியடிப்பு!

கொழும்பு, செப். 27

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில், மரக் கடத்தல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று தர்மபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர கப் ரக வாகனத்தில் சூட்சமமான முறையில் மரங்கள் மறைத்து எடுத்துவரப்பட்ட வேளை கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு, 60 முதிரை மரக்குற்றிகளுடன் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

இந்த நிலையில், சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (அ)

# மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற 5 இளைஞர்களில் 2 பேர் மூழ்கி பலி

கொழும்பு, செப். 27

பொல்கொல்ல அணைக்கு கீழே மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற 5 இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஐந்து இளைஞர்களும் நேற்று முன்தினம் புதன்கிழமை மது அருந்திவிட்டு மகாவலி ஆற்றில் இறங்கியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொல்கொல்ல நீர்த்தேக்கத்திலிருந்து விக்டோரியாவிற்கு நீர் திறக்கும் வாயில் ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை காலை முதல் திறக்கப்பட்டுள்ளதுடன், அதில் சிக்கிய 5 இளைஞர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன், மூவர் கற் பாறைகளில் தொங்கி உயிர் பிழைத்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் அனைவரும் கண்டி-யக்கஹபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

நீரில் அடித்துச் செல்லப்பட்டு, காணாமல் போன இருவரில் ஒருவர் தனஞ்சய இந்துவர (வயது-22) எனவும் மற்றவர் யாரெனத் தெரியாது என உயிர் தப்பியோர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 27 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாசி 11
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்றுவேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். விவாதம் வரும். தடைகளைதாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதுஅனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். ஆடைஆபரணம்சேரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.வியாபாரத்தில் பழைய வேலையாட்கள் அமைவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்பவேண்டாம். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

# “ஈழத்தமிழர் அரசியல் உரிமையை இந்திய அரசு பாதுகாக்க வேண்டும்”

சென்னை, செப். 27

“இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமை, வாழ்வுரிமையைப் பாதுகாக்க மத்திய பா. ஜ. க. அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்”- இவ்வாறு ம. தி. மு. க. உயர்நிலை குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை, எழும்பூரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு, “ஒரே நாடு ஒரே தேர்தல் அரசமைப்பின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானது, மாநில சட்டப் பேரவையை முன்கூட்டியே கலைக்கும் உரிமையை மாநிலத் திடமிருந்து பறித்துவிடும். எனவே, இந்தத் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும். புதிதாக பொறுப்பேற்றுள்ள இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சுகளை நடத்தி, கைதான தமிழக மீனவர்களை மீட்பதோடு அவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம், சிறைத் தண்டனை உள்ளிட்டவற்றை நீக்க அறிவுறுத்த வேண்டும்.

உடனடியாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பணிகளை மத்திய அரசு தொடங்க வேண்டும். தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை பொறுப்பில் இருந்து ஜனாதிபதி விடுவிக்க வேண்டும்”- உள்ளிட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

(எ)

# வி. சி. க. - தி. மு. க. இடையே எந்தவொரு சிக்கலுமில்லை

## திருமாவளவன் திட்டவட்டம்

கோவை, செப். 27

“வி. சி. க. - தி. மு. க. இடையே எந்தவொரு சிக்கலும் இல்லை” என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு, “தி. மு. க. - வி. சி. க. இடையே எந்த சலசலப்பும் இல்லை, எந்த விரிசலும் இல்லை. அப்படி விரிசல் உருவாகுவதற்கு வாய்ப்பும் இல்லை. எனது ஊடகப் பக்கத்தில் வெளியான ஒரு சிறிய வீடியோவில் இருந்த, “ஆட்சியிலும்



பங்கு, அதிகாரத்திலும் பங்கு” என்ற கருத்தை விவாதத்துக்கு பலரும் எடுத்துக்கொண்டனர். அந்த விவாதம் மேலும் பல விவாதங்களுக்கு இடமளித்து விட்டது. இதன் காரணமாக தி. மு. க. - வி. சி. க. இடையில் எந்த சிக்கலும் எழாது.

தமிழக அரசு முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும், போதைப் பொருட்களை ஒழிக்கும் வகையில் மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து மாநாட்டை நடத்துகிறோம்.

2026 சட்டப்பேரவைத் தேர்தல், 2029 மக்களவைத் தேர்தல்களில், கட்சி நலன், கூட்டணி நலன், மக்கள் நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உரிய முடிவெடுப்போம்”- என்றார்.

(எ)

# தி. மு. க. நினைப்பதுபோன்று வி. சி. க. தவிர்க்க முடியாத அரசியல் சக்தி அல்ல

## பா. ஜ. க. ராஜா கடும் விமர்சனம்

சென்னை, செப். 27

“தி. மு. க. நினைப்பது போன்று, வி. சி. க. ஒன்றும் தவிர்க்க முடியாத பெரிய அரசியல் சக்தி கிடையாது” என்று பா. ஜ. க. ஒருங்கிணைப்புக் குழு தலைவர் எச். ராஜா தெரிவித்தார்.

பாரதிய ஜன சங்கம் கட்சி தலைவர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா 108ஆவது பிறந்த நாள் விழா சென்னை தியாகராய நகரில் உள்ள பா. ஜ. க. தலைமை அலுவலகமான கமலாலயத்தில் கொண்டாடப்பட்டது.

இதன் பின்னர், செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு,

“பழநி பஞ்சாமிர்தம் குறித்து கருத்து தெரிவித்த இயக்குநர் மோகன் ஜியை கைது செய்தது முறையற்றது. நீதிமன்றமும் அதையே சொல்லி, தமிழக அரசு, பொலிஸ் துறைக்கு பலத்த அடி கொடுத்துள்ளது. அதேநேரம், பிரதமர் குறித்து அவதூறாக பேசிய அமைச்சர் தா. மோ. அன்பரசனை முதல்வர் இன்னும் பதவி நீக்கம் செய்யவில்லை.

வி. சி. க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் விஜயகாந்துடன் மக்கள்நல கூட்டணி வைத்து தேர்தலை சந்தித்தன. ஆனால், அந்த கூட்டணிக்கு வெறும் 6 சதவீத வாக்குகள் தான் கிடைத்தன. அதனால், தி. மு. க. நினைப்பதுபோன்று, வி. சி. க. ஒன்றும் தவிர்க்க முடியாத பெரிய அரசியல் சக்தி இல்லை” - என்றார்.

(எ)

# “தமிழக அமைச்சரவை மாறினாலும் பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிச்சம்”

கோவை, செப். 27

“தமிழக அமைச்சரவையில் மாற்றம் அமைச்சர்களுக்கு இருக்கலாம். ஆனால், ஏமாற்றம் பொதுமக்களுக்கு தான்” என பா. ஜ. க. தேசிய மகளிர் அணித் தலைவி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தவை வருமாறு, “பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தலின் பேரில் பா. ஜ. க. உறுப்பினர்



சேர்க்கை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

“தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சரியில்லை. என்கவுன்டர் செய்தால் பொதுமக்களை சமாதானம் செய்ய முடியும் என தி. மு. க. அரசு நினைக்கிறது.

தமிழக அமைச்சரவையில் மாற்றம் அமைச்சர்களுக்கு இருக்கலாம், ஆனால், ஏமாற்றம் பொதுமக்களுக்கு தான் இருக்கும். மத்திய அரசு கொடுக்கும் நிதியை மாநில அரசு திருப்பி அனுப்புகிறது. மத்திய அரசு பணம் கொடுக்கவில்லை என்று தொடர்ச்சியாக தி. மு. க. அரசு கோரிக்கை வைத்து வருகிறது”- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிடுவது குறித்து ஆராய்வு!

## ஷெஹான் சேமசிங்க தகவல்



**கொழும்பு, செப்.27**
**எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிடுவது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருவதாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்.

அதனை அவ்வாறே முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. நாம் கூட்டணியாக போட்டியிடுவது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம்.

எமது தீர்மானங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசவுள்ளோம்-என்றார். (அ)

# சுதந்திரக் கட்சிக்குள் உள்ள பிரச்னைகள் தீர்க்கப்படும்!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, செப். 27
எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சிறி லங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள பிரச்னைகள் தீர்க்கப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 65 ஆவது நினைவு தினம் கொழும்பில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவை தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்புகளும் கிடைக்கவுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் கட்சியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறக்கப்படுவார். அவர் வெற்றியடைவார் என நாம் எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# வைத்தியர் அர்ச்சுனா மீண்டும் மறியலில்!

யாழ்ப்பாணம், செப். 27
சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

வைத்தியர்களை தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித் தொந்தரவு செய்தமை தொடர்பில் வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ. யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்க தவறியமை, பிணை நிபந்தனைகளை மீறி செயற்பட்டமை காரணமாக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவின் பிணை இரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.(அ)

# 77,908 அபாயகரமான வெடிபொருட்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவில் அகற்றல்

கிளிநொச்சி,செப். 27
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்நூற்று எழுபத்தொரு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்தெட்டு அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தரவு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனமான ஸார்ப் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து எண்நூற்று எழுபத்தொரு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்தெட்டு அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் தெரிவித்தார். (அ)

# ஓய்வூதியத்தை இழந்துள்ளனர் 85 பாராளுமன்ற உறுப்பினர்கள்!

கொழும்பு, செப். 27
பாராளுமன்றம் முன்கூட்டி கலைக்கப்பட்டதன் காரணமாக 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஓய்வூதியத்தினை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் பாராளுமன்ற கலைக்கப்பட்டு வர்த்தமானியூடாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 85 பேர் ஓய்வூதியத்தை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

9 ஆவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில் குறித்த காலம் நிறைவடைவதற்கு முன்னதாக முன்கூட்டி கலைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்யும் உறுப்பினர் ஒருவருக்கு அவரது சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்படுகின்றது.

மேலும் 10 ஆண்டுகளை நிறைவு செய்யும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவர்.

1977 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க ஓய்வூதிய சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோப் மற்றும் கோபா குழுக்கள் உட்பட சுமார் 80 குழுக்கள் ரத்து!

கொழும்பு, செப். 27
பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் ஊடாக கோப் மற்றும் கோபா குழுக்கள் உட்பட சுமார் 80 குழுக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள போதிலும் அரசியலமைப்பு பேரவை மாத்திரம் கலைக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் சபாநாயகர் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் ஏனைய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புதிய குழுக்கள் நியமிக்கப்படும் வரை அதன் உறுப்பினர்களாக மாத்திரம் செயற்பட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா செயல்பட்டிருந்தார்.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம், சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், பிரதிநிதிகள் குழுக்களின் தலைவர், சபை முதல்வர் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆகிய பதவிகள் இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்களுக்குச் 'சீல்'!

கொழும்பு, செப். 27
சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த மூன்று உணவகங்கள் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதுடன், ஐந்து உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மஹரகம பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மஹரகம பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சுமார் 37 உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், சில உணவகங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் மஹரகம பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் கூறினார்.

# பதவி விலகிய லிட்ரோ தலைவர்!

கொழும்பு, செப். 27
லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் பதவி விலகியுள்ளார்.

பதவி விலகல் கடிதத்தை அவர் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை லிட்ரோ எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு இருக்காது என்றும் முதித பீரிஸ் தெரிவித்தார். (அ)

# பாராளுமன்றத் தேர்தலுக்கு அச்சிடல் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, செப். 27
பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முதற்கட்ட அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க ஊடகப் பிரிவின் அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பான போதுமான ஆவணங்கள் அரசாங்க அச்சகத்தில் உள்ளது.

அந்தவகையில் தேர்தல் பணிகள் தொடர்பான வர்த்தமானிகள் போன்றவற்றை முதற்கட்டமாக அச்சிடும் பணியை அச்சகம் தொடங்கியுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# நுகர்வுக்குப் போதுமான எரிபொருள் கையிருப்பில்!

## ஜனாதிபதிக்கு அறிவித்த அதிகாரிகள்

கொழும்பு, செப். 27

**இந்த நாட்டில் நுகர்வுக்கு போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அறிவித்தனர்.**

மக்களுக்குத் தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அடுத்த வருடத்துக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி என்ற வகையில் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய உதவித்திட்டத்தின் கீழ் மின்சக்தி அமைச்சுக்குக் கிடைத்துள்ள சூரிய சக்தி பனல்களை விரைவில் பிரிவெனாக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்த ஜனாதிபதி, சூரிய சக்தி பனல்களை வழங்குவதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடனுதவிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஒப்புதல் வழங்க ஒரு குழுவை நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதன் மூலம் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்தி கிராமத்துக்கு பணம் கிடைக்கும் வகையிலான முறைமையொன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, இதன் ஊடாக பொருளாதாரத்தை விரைவாக பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். இந்தச் செயற்பாடுகளில் அதிகாரிகளுக்கு பெரும் பங்கு இருப்பதாகவும் அதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

# தேங்காய் எண்ணெய் 100 ரூபாவால் உயர்வு!

கொழும்பு, செப். 27

சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலை 100 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னதாக ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 610 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போது ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை 700 முதல் 800 ரூபா வரை அதிகரித்துள்ளதாக தேங்காய் எண்ணெய் வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் குறிப்பிட்டனர். (அ)

# பொருளாதார ரீதியாக நாட்டை புதிய அரசு முன்னேற்றவேண்டும்!

## சுசில் பிரேமஜயந்த கோரிக்கை

கொழும்பு, செப். 27

மக்கள் ஆணைக்கு இணங்க, நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்துக்கு உள்ளதாக முன்னாள் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசாங்கமொன்றை பெரும்பான்மையான மக்கள் தெரிவு செய்துள்ளார்கள். இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் பிழையான செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் அதேநேரம், சரியான வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராகவே உள்ளோம்.

எமது கட்சியின் கொள்கைகளுக்கு இணங்க நாம் செயற்படுவோம். பொதுத் தேர்தலில் கூட்டணியமைப்பது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறுகிறது. விரைவில், இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்.

மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். இந்த ஆணையை மதித்து நாட்டை பொருளாதார ரீதியாக இவர்கள் முன்னேற்ற வேண்டும். வாகனங்கள் தொடர்பாக எதுவும் கூறமுடியாது. நான் இரண்டு வாகனங்களை தான் பயன்படுத்தினேன். இதனை ஒப்படைத்துவிட்டு, தற்போது தனிப்பட்ட வாகனத்தில்தான் பயணிக்கிறேன் -என்றார். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகையில் வீழ்ச்சி!

கொழும்பு, செப். 27

இம்மாதத்துக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்த்ததை விட குறைவாகவே உள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, விஸா வழங்கல் தொடர்பான பிரச்னைகளே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கவுள்ள 39 நாடுகளின் பிரஜைகளுக்கான விஸா இல்லாத பயண வாய்ப்புகள், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவும் என்று தலைவர் பெர்னாண்டோ நம்பிக்கை தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் இலக்கை அடைய இந்த முயற்சி உதவும் என்று அவர் நம்பிக்கையாக தெரிவித்தார்.

செப்ரெம்பர் 1 முதல் 17 வரை, மொத்தம் 70,678 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# விபத்தில் தம்பதி பலி!

கொழும்பு, செப். 27

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தம்பதியர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய நபரும் அவரது 32 வயது மனைவியும் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்த நபர்களின் பெயர்கள் வெளியிடப்படும்!

## கூறுகிறார் வசந்த சமரசிங்க



கொழும்பு, செப். 27

ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 253 வாகனங்கள் முறைக்கேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த நபர்களின் பெயர்கள் நாட்டு மக்களுக்கு வெளியிடப்படும் என்றும் இவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த வாகனங்கள் தொடர்பாக நாம் தீர்க்கமான விசாரணைகளை நடத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாம் உரிய நடவடிக்கை எடுப்போம். யார் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தது என்ற விவரங்களை நாம் நாட்டு மக்களுக்கும் வெளிப்படுத்துவோம்.

அரச அதிகாரிகள் இதற்காக எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஏனெனில், இவர்களுக்குத்தான் இந்த வாகனங்களை யாருடையது, யார் பயன்படுத்தியது என்ற அனைத்து விடயங்களும் தெரியும்.

ஏன், இவர்கள் இந்த வாகனங்களை ஒப்படைத்துவிட்டு ஒழிய வேண்டும்? அதாவது, உரிமையில்லாதவற்றை பயன்படுத்தினால்தான் பயப்பட்டு, ஒழிந்துச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 253 வாகனங்களை வெளியாட்கள் பயன்படுத்துகிறார்கள்.

இவைதான் இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலக அதிகாரிகளிடம், வாகனங்களை பயன்படுத்திய நபர்களின் பெயர் விவரங்களை கோரியுள்ளோம்.

இந்த அனைத்து நபர்களுக்கு எதிராகவும் எதிர்க்காலத்தில் சட்டநடவடிக்கை மேற்கொள்வோம்.

ஜனாதிபதி இது தொடர்பாக உறுதியாகவுள்ளார். இது மக்களுடைய வாகனங்கள். இவை மீளவும் மக்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும்

## எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கை

கொழும்பு, செப். 27

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவும் அவரது அரசாங்கமும் வெற்றியீட்டக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அனுரகுமார திஸாநாயக்கவின் நடத்தை மற்றும் அவரது அறிக்கைகளின் அடிப்படையில், மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் பலம் இந்த அரசாங்கத்திற்கு இருப்பதாக நான் நம்புகிறேன்," என்று திஸாநாயக்க கூறினார்.

தற்போதைய அரசாங்கத்தின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கக்கூடாது என தாம் நம்புவதாகத் தெரிவித்த திஸாநாயக்க, பொதுத் தேர்தலில் தேர்தல் வெற்றி மற்ற கட்சிகளுக்கு கடினமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அது சுலபமாக இருக்காது.

தற்போதுள்ள எம்.பிக்களில் இருந்து ஒரு சிறிய அமைச்சரவையை நியமித்து, அரசாங்கத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வெற்றிகரமான ஜனாதிபதி எங்களிடம் இருக்கிறார்," என்று அவர் கூறினார்.

திஸாநாயக்க, எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி குறைந்தது 6.5 மில்லியன் வாக்குகளைப் பெறும் என்று கணித்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜேவிபி இப்போது அந்த நன்மையைப் பெற்றுள்ளன. எவ்வாறாயினும், தேர்தலுக்கு பலமான எதிர்க்கட்சியை உருவாக்குவதற்கு ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்தால் அது சிறந்ததாக இருக்கும் என நான் நம்புகிறேன்" என திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் வலுப்பெறவேண்டுமாயின் அடக்குமுறை சட்டங்கள் ஒழியவேண்டும்

## சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 27

**வலுவான ஜனநாயக ஆட்சியின் அடித்தளம் அடக்குமுறைக்கு எதிரானது என சுட்டிக்காட்டியுள்ள சுதந்திர ஊடக இயக்கம், புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை அதற்காக அர்ப்பணிக்குமாறு கேட்டுள்ளது.**

இது குறித்து அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த காலங்களில், மக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி, அதன் மூலம் ஜனநாயகத்தின் உயிர்மூச்சை நசுக்கும் வகையில், பல கட்டளைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவற்றில் ஆன்லைன் கணினி பாதுகாப்புச் சட்டம், முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மேலும் வரைவு செய்யப்பட்ட புதிய தொழிலாளர் சட்டங்கள் ஆகியவை அடங்கும். சுதந்திர ஊடக இயக்கம் உட்பட பிற ஊடக மற்றும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள், பல சந்தர்ப்பங்களில் இத்தகைய அடக்குமுறை கட்டளைச் சட்டங்கள் - இதில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் அடங்கும் - அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகத்திற்கு ஒரு மரண அடியாகும் என்பதை சுட்டிக்காட்டி, இத்தகைய அடக்குமுறை கட்டளைச் சட்டங்களை இரத்து செய்ய கோரிக்கை விடுத்தன, நீதித்துறை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. மேலும் பல சந்தர்ப்பங்களில் அவற்றை ரத்து செய்ய வேண்டிய கட்டாயமும் அரசுக்கு ஏற்பட்டது.

இந்த பின்னணியில், அனைத்து அடக்குமுறை கட்டளைச் சட்டங்களையும் இரத்துச் செய்ய கிடைத்திருக்கும் சந்தர்பமானது புதிய ஜனாதிபதிக்கு ஜனநாயகத்திற்கான தனது உண்மையான அர்ப்பணிப்பை நிரூபிக்க கிடைத்திருக்கும் ஒரு பொன்னான வாய்ப்பாக சுதந்திர ஊடக இயக்கம் கருதுகிறது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்காக முழுமையான ஜனாதிபதி ஆணைக்குழு / உண்மை கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்கவும் சுதந்திர ஊடக இயக்கம் முன்மொழிந்தந்தை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

அரச ஊடகங்களை பக்கச் சார்பற்ற மற்றும் சுயாதீனமான பிரஜை ஊடகமாக மாற்றியமைப்பதும் சமூக பொறுப்புணர்வை மையமாகக் கொண்ட ஊடகவியலில் ஈடுபடுவதற்கு அனைத்து ஊடகங்களுக்கும் தேவையான சீர்திருத்தங்களை முன்மொழிவதற்கு சுயாதீனமான பொறிமுறையொன்றை உருவாக்குவதும் அவசரத் தேவையாகும்.

30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், சுதந்திர ஊடக இயக்கம் விரிவான ஊடக சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. எனினும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படை நிபந்தனை என்னவென்றால் அடக்குமுறை கட்டளைச் சட்டங்களை ஒழித்து ஊடகங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து வடிவிலான குற்றங்களுக்கும் நீதி வழங்குவதும் ஆகும்-என்றுள்ளது. (அ)



# முல்லைத்தீவிலும் திலீபனுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, செப். 27

தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவேந்தல் நேற்று தமிழர் பகுதிகளில் நடைபெற்றது.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மௌன அஞ்சலியுடன் தொடங்கிய இந்நினைவேந்தலில், தியாகி திலீபனின் உருவப் படத்துக்கு மலர் தூவி சுடரேற்றப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது குறித்து பேச்சு

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

கொழும்பு, செப். 27

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நாட்டை கொண்டு செல்லக்கூடிய பொருத்தமான நபர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் எம்மோடு இணைந்து பணியாற்றிய அரசியல் கட்சிகளுடன் தொடர்ந்தும் நாம் பயணிப்போம்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையுமாறு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. கிராமிய மட்டத்திலிருந்தும் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கைகள் குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளதுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம்.

அதில் உள்ள சாதகமான மற்றும் பாதகமான விடயங்களைப் பற்றிப் பேசுகிறோம். எமது தீர்மானம் என்னவென்பதை நாம் கட்சித் தலைவருடன் கலந்துரையாடி அறிவிப்போம்.

ஊழல்களுடன் தொடர்புடையோரையும் மக்களால் நிராகரிக்கப்பட்டோரையும் எமது கூட்டணியில் இணைத்துக் கொள்ள நாம் ஒருபோதும் தயாராக இல்லை-என்றார். (அ)

# 1 மில்லியன் பின்தொடர்பவர்களை தாண்டிய புதிய ஜனாதிபதி அநுர!

கொழும்பு, செப். 27

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சமூக ஊடகங்களில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளார்.

முகப்புத்தகத்தில் ஒரு மில்லியன் பின்தொடர்பவர்களைத் தாண்டிய ஆறாவது இலங்கை அரசியல்வாதி என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 1.4 மில்லியன் முகப்புத்தக பின்தொடர்பவர்களைக் கொண்ட இலங்கை அரசியல்வாதியாக உள்ளார்.

மேலும் முகப்புத்தகத்தில் ஒரு மில்லியன் பின்தொடர்பவர்களைத் தாண்டிய அரசியல்வாதிகள்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - 1 மில்லியன்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - 1.1 மில்லியன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ - 1.3 மில்லியன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க - 1.2 மில்லியன். (அ)

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் ஆதரவு

கொழும்பு, செப். 27

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுகாதாரத் துறையை சீர்திருத்தம் மற்றும் மேம்படுத்துவதற்கான ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு, நாட்டின் மருத்துவ நிபுணர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சார்பற்ற தொழிற்சங்கமான மருத்துவ நிபுணர்கள் சங்கம் தொடர்ச்சியான ஒத்துழைப்பை உறுதியளித்தது.

நாட்டில் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது குறித்து அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் துறை தொடர்பான விடயங்களை விரிவாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியை சந்திக்கும் வாய்ப்பையும் கடிதமொன்றினூடாக அந்த சங்கம் கேட்டுள்ளது.

இலங்கை மக்களின் நலனுக்காக பயனுள்ள சுகாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பங்காளர்களாக இருப்பதற்கான விருப்பத்தையும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் எடுத்துரைத்தது. (அ)

# ஐ.தே.க. தலைவராக ருவான் விஜேவர்தன?

கொழும்பு, செப். 27

ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மற்றும் அதன் செயற்பாடுகளிலிருந்து முன்னாள் ஜனாதிபதி விலகுவதாகவும் அதன் தலைமைப் பொறுப்பை ருவான் விஜேவர்தனவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சிக்குள் இந்த மாற்றங்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இடம்பெறும் எனவும் ஐக்கியத் தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து அரசியல் இணக்கத்தை உருவாக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைக்க தயாரில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியாக தெரிவித்துள்ளமையால் எதிர்வரும் நாட்களில் அரசியல் இணக்கத்துக்கு தேவையான சூழலை தயார்படுத்தும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீங்கி ருவான் விஜேவர்தனவுக்கு கட்சியின் செயல்பாட்டை நடத்தும் பொறுப்பை வழங்க தயாராகி வருவதாகவும் எனினும் அதில் நிச்சயமற்ற நிலை காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (அ)

# கோழி இறைச்சி விலை குறையும்

கொழும்பு, செப். 27

சந்தையில் கோழி இறைச்சிக்கான தேவை வெகுவாக குறைந்துள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அடுத்த இரண்டு வாரங்களில் ஒரு கிலோ கோழியின் விலை 100 முதல் 150 ரூபா வரை குறையலாம் என சங்கம் தெரிவித்தது.

ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை தற்போது 1000 ரூபா தொடக்கம் 1100 ரூபா வரை உள்ளதாகவும், அடுத்த பதினைந்து நாட்களில் இந்த விலை 900 முதல் 850 ரூபா வரை குறையலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்துக்குள் கோழி இறைச்சிக்கான தேவை ஓரளவுக்கு அதிகரிக்கலாம் எனவும், அதனால் மீண்டும் விலை உயரலாம் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் சாரதியிடம் இலஞ்சம் வாங்கிய 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

மட்டக்களப்பு, செப். 27

மணல் ஏற்றிவந்த டிப்பர் சாரதியிடம் 2000 ரூபாய் இலஞ்சம் வாங்கிய பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் புதன்கிழமை மாலை மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் வைத்து கைது செய்யப்பட்டதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகனத்தை நிறுத்தி பரிசோதித்த விசேட பொலிஸ் பிரிவினருடன் இணைக்கப்பட்டிருந்த சார்ஜன்ட் உள்ளிட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு விசேட அதிகாரிகளே 2000 ரூபாய் இலஞ்சம் வாங்கிய நிலையில் இவர்களை கைது செய்தனர். கைதான சந்தேக நபர்கள் இருவரும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (எ)

# வினாடி வினாப் போட்டியில் மிக்கேல் கல்லூரி முதலிடம்

மட்டக்களப்பு, செப். 27


கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தால் மூன்றாவது தடவையாக நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களை சேர்ந்த உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட 24 பாடசாலைகளுகு இடையில் இந்த வினாடி வினாப்போட்டி நடைபெற்றது.

இதில், மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் உயர்தர வர்த்தகப் பிரிவைச்சேர்ந்த மாணவர்களான

கே. துவிச்சன், ஆர். மிதுசான், ரீ. அபிச்சரிசன், ஆர். தாட்சயன் ஆகிய மாணவர்கள் பங்கு பற்றி கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து கொண்டார். (எ)





# கிழக்கு மாகாண புதிய ஆளுநர் கடமைகளை பொறுப்பேற்றார்

திருகோணமலை, செப். 27

கிழக்கு மாகாண ஆளுநராக ஜெயந்த லால் ரத்னசேகர திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கந்தளாய் அக்ரபோதி வித்தியாலய பழைய மாணவனும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தரும் இரசாயனவியல் பேராசிரியரும் ஆவார்.

தமிழ் உட்பட மூன்று மொழிகளிலும் சரளமாக உரையாடும் ஆற்றல் மிக்கவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# 2 மாதங்களுக்கு மேலாக வீணடிக்கப்படும் குடிநீர்

## அதிகாரிகள்மீது மக்கள் கடும் விசனம்

சம்மாந்துறை, செப். 27

அம்பாறை மா்வட்டம் சம்மாந்துறை பகுதியில் உடங்கா என்னும் பகுதியில் அம்பாறை - கல்முனை பிரதான வீதியின் ஒரு மருங்கில் 24 மணித்தியாலமாகவும் சுமார் 2 மாதங்களுக்கு மேலாக குடிநீர் வீணடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பின் பின்னர் சேதமாக்கப்பட்டதாக கூறப்படும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குச் சொந்தமான குடிநீர் குழாய் திருத்தப்பட்ட பின்னர் இவ்வாறு மேலதிக நீரை தினமும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்தப் பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு தினமும் வீணாக வெளியேற்றப்படும் நீர் அருகில் உள்ள வடிகான் ஊடாக குளத்தை நோக்கி சுமார் 2 கிலோ மீற்றர் வரை வீணாக வெளியேற்றப்பட்டு வருகின்றது.

அத்துடன் சம்மாந்துறை பகுதியில் இன்னும் பல குடும்பங்கள் குடிநீர் இணைப்பின்றி அல்லல்பட்டு வரும் நிலையில் இவ்வாறு வீணாக நீர் வெளியேற்றப்படுகின்றமை தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தண்ணீருக்கான தேவை அதிகரித்துள்ளது.



இதனையடுத்து அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளுக்காக நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்து வருகிறது. இதேவேளை, வீணாக குடிநீர் வெளியேற்றப்படுவதை குறித்த திணைக்களத்தினர் ஏன் அசமந்தமாக பார்த்துக் கொண்டு நிற்கின்றனர் என்பது தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

சில பிரதேசங்களில் குழாய் நீர் விநியோகத்தில் கசிவு சாதாரணமானதாகக் காணப்பட்டாலும் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள வீண் விரயம் பாரதூரமானது. குடிநீர் விநியோகக் குழாய்களில் அழுத்தம் அதிகரிக்கும் போது வெடிப்புகள் ஏற்படுவது வழமையாகும். சில பிரதேசங்களில் அவ்வாறான வெடிப்புகள் ஏற்பட்டு மணித்தியாலக் கணக்கில் ஏன் நாட்கணக்கில் குடிநீர் வீண்விரயமானாலும் அது தொடர்பில் பின்னர் கவனம் செலுத்தப்பட்டு நிலைமை சீர் செய்யப்படும்.

ஆனால், இவ்விடத்தில் அவ்வாறில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

# இரவில் யானைகள் பகலில் குரங்குகள் தொல்லை அதிகரிப்பு; மக்கள் பாதிப்பு

அம்பாறை, செப். 27

அம்பாறை மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் இரவில் காட்டு யானைகளும், பகலில் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரச அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மகா ஓயா, பதியத்தலாவ, தெஹியத்தக்கண்டிய மற்றும் நாமல் ஓயா பிரதேசங்களில் இரவில் காட்டு யானைகளின் தொல்லை முன்னரை விட அதிகரித்துக் காணப்படுவதால் உயிர்கள் காவு கொள்ளப்படுவதுடன், குடியிருப்புகளுக்கும், உடைமைகளுக்கும், பயிர்களுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன.



இதேவேளை, பகலில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் வீடுகளில் காணப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலைக்கு பிள்ளைகள் கொண்டு செல்லும் உணவுப் பொருட்களையும் குரங்குகள் பலவந்தமாக பறித்துச் செல்வதால் மாணவர்கள் பாடசாலைக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்வதில் பலவிதமான சிக்கல்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

பயிர் செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராகவுள்ள அநேகமான பழமரங்களையும் பழங்களையும் குரங்குகள் சேதப்படுத்துவதால் பொருளாதார ரீதியில் நஷ்டமடைந்து வருவதாக பிரதேசவாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

# இலங்கை விவசாய சேவைக்கு தெரிவான ஆசிரியை சுகன்யா கௌரவிக்கப்பட்டார்





களுவாஞ்சிக்குடி, செப். 27

இலங்கை விவசாய சேவைக்கு உள்வாங்கப்பட்ட பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆசிரியை இ. சுகன்யா பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.


பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடியில் இலங்கை விவசாய சேவைக்கு தெரிவாகிய பாடசாலையில் தொழில்நுட்ப பிரிவில் கற்பித்த ஆசிரியையே இவ்வாறு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் முழு வீச்சு போர் தரைவழித் தாக்குதலில் இஸ்ரேல்!

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் எச்சரிக்கை



வாஷிங்டன், செப். 27

**லெபனான் மீது தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் ஆயத்தமாகி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஒரு முழு வீச்சுப் போருக்கான சாத்தியம் இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனால் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.**

இஸ்ரேல் இராணுவம் கடந்த திங்கட்கிழமை முதல் லெபனானின் தெற்கு பகுதி நகரங்கள் மீது குண்டு மழை பொழிந்து வருகிறது. குறிப்பாக, லெபனானின் ஹெர்மல், பிப்லோஸ், பால்பெக் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ளதை இஸ்ரேல் உளவுத் துறை கண்டறிந்ததை டுத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

3ஆவது நாளாக நேற்று முன்தினம் புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 72 பேர் கொல்லப்பட்டனர். 233 பேர் காயமடைந்தனர். இதனால் லெபனானில் மொத்த உயிரிழப்பு 620 ஆக அதிகரித்தது. இதுவரை 5 இலட்சம் பேர் வரை தெற்கு லெபனானில் இருந்து மற்ற பகுதிகளுக்குக் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் இஸ்ரேல் இராணுவத் தளபதி ஜெனரல் ஹெர்ஸி ஹலேவி, படையினர் மத்தியில் ஆற்றிய உரையில், "உங்கள் தலைகளுக்கு மேல் ஜெட் விமானங்கள் பறப்பதை உணர்ந்திருப்பீர்கள். நாம் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகிறோம். இனி தரைவழித் தாக்குதலுக்கும் நாம் ஆயத்தமாக வேண்டும். ஹிஸ்புல்லாக்களை தொடர்ந்து பலவீனப்படுத்துவோம்" என்று கூறினார்.

இதேவேளை, "ஒரு முழு வீச்சுப் போருக்கு வாய்ப்புள்ளது. இந்த மோதலைத் தடுக்க ஏதுவான சூழலும் இல்லாமல் இல்லை. ஒரு வேளை அது நடந்தால் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அடிப்படையிலேயே மாற்றங்கள் ஏற்படும். ஒரு தீர்வுக்கான வாய்ப்பு இன்னமும் இருக்கிறது" என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்தார்.

# செனகல் கடற்பரப்பில் 30 சடலங்களுடன் படகு

டக்கர், செப். 27

செனகலின் கரையோர பகுதியில் படகொன்றிலிருந்து 30 சிதைந்த சடலங்கள் மீட்கப்பட்டன.

தலைநகர் டக்கரிலிருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் படகொன்று தத்தளிப்பதாக தகவல் கிடைத்தது என்று தெரிவித்த செனகல் கடற்படை, இதனைத் தொடர்ந்து அந்த மரப்படகை கரைக்கு கொண்டுவந்ததாகவும் தெரிவித்துள்ளது.

உடல்கள் மிக மோசமாக சிதைவடைந்து காணப்படுவதால் மீட்பு அடையாளம் காணும் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக இடம்பெறுவதாக செனகல் கடற்படை தெரிவித்துள்ளது.

செனகலில் இருந்து ஸ்பெயினின் கனரி தீவுக்கு செல்லும் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையிலேயே இந்த சம்பவம் குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

உடல்கள் சிதைவடைந்துள்ள நிலையை பார்க்கும்போது குடியேற்றவாசிகள் பல நாட்களாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் மிதந்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

குறித்த படகு எப்போது எங்கிருந்து புறப்பட்டது என்பதை கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெறுகின்றன. (எ)

# இஸ்ரேலின் வடபகுதியில் ரொக்கெட்வீசி தாக்குதல்

டெல் அவிவ், செப்.27

27இஸ்ரேலின் வடபகுதியை இலக்குவைத்து ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முதலில் ஐந்து ரொக்கெட்கள் வருவதை அறிந்து அவற்றில் சிலவற்றை இடைமறித்தோம், சில ரொக்கெட்கள் மனிதர்கள் இல்லாத பகுதிகளில் விழுந்து வெடித்தன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் 50 ரொக்கெட்கள் வருவதை அறிந்து இடைமறித்தோம். ஆனால், சில கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. தீ பரவல் ஏற்பட்டது என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு இஸ்ரேலில் பல பாடசாலைகள் மூடப்பட்டதாக ரைம்ஸ் ஒவ் இஸ்ரேல் ஊடகம் தெரிவித்துள்ளது. (எ)

# மொசாட் தலைமையகம் நோக்கி ஹிஸ்புல்லா ஏவுகணை தாக்குதல்


டெல் அவிவ், செப். 27

இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட்டின் தலைமையகத்தை நோக்கி ஹிஸ்புல்லா அமைப்பினர் செலுத்திய ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் உள்ள மொசாட் தலைமையகத்தை இலக்கு வைத்தே ஹிஸ்புல்லா அமைப்பு ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டது என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிய தலைநகரை நோக்கி ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பும் தெரிவித்துள்ளது.

காஸா பள்ளத்தாக்கில் பலஸ்தீனர்களின் கௌரவமான துணிச்சலான எதிர்ப்புக்கு ஆதரவாகவும் லெபனான் மக்களை பாதுகாப்பதற்காகவும் இவ்வாறு ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)



# நிலநடுக்கத்தை தொடர்ந்து ஜப்பானை தாக்கிய சுனாமி

ரோக்கியோ, செப். 27

ஜப்பானின் தொலைதூர தீவான இசு தீவுகளுக்கு அருகே 5. 6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து செவ்வாய்க்கிழமை சிறியளவில் சுனாமி தாக்கியது.

பூகம்பம் ஏற்பட்டு 40 நிமிடங்களுக்கு பின்பு 50 சென்றிமீற்றர் (1. 6 அடி உயரம் கொண்ட சுனாமி அலை இசு தீவுகளை அடைந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அங்கு பூகம்பம் மற்றும் சுனாமியால் எந்த வொரு சேதமும் ஏற்படவில்லை.

கடல் மட்டத்திலிருந்து ஒரு மீற்றர் வரை அலைகள் உயரும் என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் மற்றும் உள்ளூர் வானிலை அதிகாரிகள், சுனாமி எச்சரிக்கையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைதி பேச்சுகள் மூலம் போரை நிறுத்த முடியாது

## ஐ. நாவில் உக்ரைன் ஜனாதிபதி உரை

நியூயோர்க், செப். 27

ரஷ்யாவுடன் அமைதி பேச்சுகள் மூலம் போரை நிறுத்திவிட முடியாது என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐ. நா. பாதுகாப்பு சபை மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. போரை முடிவுக்கு கொண்டுவர இந்தியா உள்ளிட்ட நாடுகள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

இந்த நிலையில், ஐ. நா. பாதுகாப்பு சபையில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்தவை வருமாறு,



"உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்கான எனது செயல்திட்டத்துக்கு 100இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. போரில் ஈடுபட்ட நாடுகளும் அதில் அடங்கும். ஆனால், சில நாடுகள் அந்தத் திட்டத்துக்கு மாறான சில திட்டங்களை பரிந்துரைக்கின்றன. அவை நிதர்சனத்துக்கு அப்பாற்பட்டு இருப்பதோடு, போரைத் தொடர புடினுக்கு உதவும்வகையில் உள்ளன. எனவே, உண்மையான அமைதி ஏற்படுத்தக்கூடிய திட்டத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டும்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் செய்து கொண்டிருப்பது சர்வதேச குற்றம். அவர் எண்ணற்ற சர்வதேச விதிமுறைகளை மீறியுள்ளார். அவர் தானாக போரை நிறுத்த மாட்டார். ரஷ்யாவுடன் அமைதி பேச்சுகளை நடத்துவதன் மூலம் போரை நிறுத்திவிட முடியாது. போர் எளிதாக நிற்காது.

அதற்கு ரஷ்யாவை அமைதி தீர்வுக்கு நகர்த்த உலகளாவிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக்கிரமிப்பாளர் மற்றும் ஐ. நா. விதிகளை மீறியவர் என்ற அடிப்படையில், புடின் மீது இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். மற்ற நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை ஒவ்வொரு நாடும் மதிக்க வேண்டும் என்ற ஐ. நா. பிரகடனத்தை ரஷ்யா பின்பற்ற செய்ய வேண்டும்"- என்றார். (எ)

# தன்பாலின திருமணத்துக்கு தாய்லாந்தில் அங்கீகாரம்

பாங்கொக், செப். 27

தாய்லாந்தில் தன்பாலின திருமணத்துக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் தன்பாலின திருமணத்துக்கு அனுமதி அளிக்கும் வகையிலான சட்டத்திருத்தம் அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் கடந்த ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் அந்த நாட்டின் மன்னரின் ஒப்புதலுக்காக தன்பாலின திருமண சட்டத்திருத்தம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே குறித்த திருமண சட்டத்துக்கு மன்னர் அனுமதி வழங்கியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் வாகனங்கள் மகிந்த காலத்துக்கு உரியவை!

## ஆசு மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, செப். 27

**காலிமுகத்திடலில் தரித்து நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்த தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை. அனைத்து அணியினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு பயணிக்கவே எதிர்பார்த்துள்ளோம். எதிரணியில் உள்ள அனைவரையும் ஒன்றிணைப்பதே எம்முடைய எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியினருடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

நாம் முடிந்த அளவு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கம் 833 வாகனங்களை காலிமுகத்திடலுக்கு அண்மையில் நிறுத்தியுள்ளது. அது அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்கு ஏற்ற சிறந்த எடுத்துக்காட்டு என்றே கூற முடியும்.


நாம் ஆட்சியிலிருந்து விலகியவுடன் வாகனங்களை அரசாங்கத்திடம் அன்றே ஒப்படைத்தோம்.

ஆனால் தற்போது தரித்து நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலிருந்து பாவிக்கப்பட்ட வாகனங்களாகும்.

அவை மஜிக் வாகனங்கள் அல்ல. வாகனங்களை மீளக்கையளிப்பது சாதாரண சம்பிரதாயமாகும்-என்றார். (அ)

புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு

# விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு




கொழும்பு, செப். 27

நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் இடம்பெற்ற கேள்விகளுக்கு இணையாக அனுமானங்களின் அடிப்படையிலான கேள்விகள் அடங்கிய வினாத்தாள் வெளியானமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதானிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏற்கனவே இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், அதனைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய பிரச்னைக்குரிய தீர்வு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)



# தியாகி திலீபனின் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு!

வவுனியா, செப். 27

தியாகி திலீபனின் 37ஆவது நினைவு தினம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டுவரும் வவுனியா வீதி அபிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது திலீபனின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி, ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்-

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், தமிழர்களுக்குமான தீர்வு கிடைக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச பொறிமுறை யூடாகவே எமது பிள்ளைகளை கண்டுபிடிக்க முடியும். நாம் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்புக்களை நாடியே எமது போராட்டங்களை முன்னெடுத்து நிற்கின்றோம்-என்றனர். (அ)

# பசுமை அமைதி விருதுக்கான சூழல் பொது அறிவுப் பரீட்சை

## மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், செப். 27

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கோடு ஆண்டுதோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்குரிய பசுமை அமைதி விருதுகளைத் தெரிவு செய்வதற்கான சூழல் பொது அறிவுப் பரீட்சை ஒக்டோபர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில்-

சூறையாடப்படும் இயற்கை வளங்கள், கண்மூடித்தனமான நிலப் பயன்பாடு, கட்டுப்பாடற்ற பெருகும் மாசுகள், சூடாகி வரும் பூமி, விஸ்வரூபம் பெற்று வரும் காலநிலை மாற்றம் ஆகியனவற்றின் கூட்டுத் தாக்குதல்களினால் இயற்கை மூச்சுத்திணறி வருகிறது. இந்நிலை நீடித்தால் விரைவிலேயே உலகம் பெரும் பிரளயத்துக்குள் தள்ளப்பட்டு விடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. எனினும், இந்த எச்சரிக்கைகளைப் புறந்தள்ளி இயற்கைச் சூழலை நாம் தொடர்ந்து மோசமாகச் சீரழித்துக் கொண்டிருக்கிறோம்.

இயற்கையின் மீதான தாக்குதல்களை நிறுத்தி அதனுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, மாணவர்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கோடு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்குப் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகிறது.

மாணவர்களிடையே 2024ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணையவழியூடாக 27.10.2024 (ஞாயிற்றுக்கிழமை) முன்னிரவு 7.00 மணி தொடங்கி 8.30 மணிவரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். இலவசமாக நடைபெறவுள்ள இப்பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnatio nalgreen.org இணையத்தளத்தின் ஊடாக 20.10.2024 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இப்பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களிலிருந்து முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதழோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் 1 பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பேக்கரி உற்பத்திகளின் விலை குறையவேண்டும்

கொழும்பு, செப். 27

சந்தையில் முட்டையின் விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் முட்டை தொடர்பான பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளையும் குறைக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை கூறியுள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை தற்போது 28 முதல் 35 ரூபா வரை உள்ளதாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்துள்ளார்.



அந்த அனுகூலத்தை நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)

# மார்பகப் புற்றுநோய் உயிரிழப்பு அதிகரிப்பு!

கொழும்பு, செப். 27

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் மார்பக புற்றுநோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்ட சமூக சுகாதார வைத்திய நிபுணர் ஹசரெலி பெர்னாண்டோ கூறியுள்ளார்.

மார்பக புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் இலங்கையில் வருடாந்தம் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மார்பகப் புற்றுநோயாளர்கள் பதிவாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

தற்போது இலங்கையின் பொருளாதாரம் மீளக் கட்டமைப்பதற்கு தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கள் அவசியம் என்பதை அறிந்துகொண்டுள்ளதோடு, பொருளாதார வளர்ச்சி, செழுமை, மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் ஒரே அளவான முக்கியத்துவத்தை கொண்டவை என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் மிகவும் பாதிக்கப்படும் நிலையில் இருப்போரின் தேவைகளை பூர்த்தி செய்வதை போலவே அனைத்தும் உள்ளடங்களான அபிவிருத்திக்கு இலங்கையின் புதிய நிர்வாகத் தலைமைக்கு உலக வங்கிக் குழுமத்தின் ஆதரவை பெற்றுத்தர அர்ப்பணிப்பதாகவும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கொக்குத்...

"இன்றைய (நேற்று) வழக்கு விசாரணையின்போது ராஜ்சோமதேவா வின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் 1994 ஆம் ஆண்டுக்கும் 1996ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இடைப்பட்டதாக இருக்கும் என்று அவருடைய இறுதி அறிக்கை இருந்ததாக நீதிமன்றில் கூறப்பட்டிருந்தது.

"அத்துடன், சட்ட மருத்துவ அதிகாரியால் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்க தகடு இலக்கங்களும், ஆடைகளில் இருந்து எடுக்கப்பட்ட இலக்கங்களும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த இலக்கங்களை பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், அதனை உரிய முறையில் அறிவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் அறிவித்தது. இதன்படி, அதுபற்றி அறிவுள்ளவர்கள் நீதிமன்ற பதிவாளருக்கு அது சம்பந்தமாக தெரிவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

"இந்த ஒட்டு மொத்த அறிக்கைகளும் டிசெம்பர் 12 ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளன. வரவேண்டிய மீதி அறிக்கைகளையும் நீதிமன்றம் நினைவூட்டலை அனுப்பி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள இருக்கிறது. இந்த வழக்கு மீண்டும் டிசெம்பர் 12 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது" - என்றார். (ஐ)

## அரசியல்...

சூழலை கட்டுப்படுத்த எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் கூறினார்.

நியூயோர்க் நகரில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எஸ்.ஜெய்சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் மாற்றங்கள் நாட்டின் குடிமக்களால் தீர்மானிக்கப்படும் எனவும் இலங்கை அரசியலில் ஏற்படுவதை அவர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் அரசியல் மாற்றங்கள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அயல்நாடான இலங்கை மிக ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்த சந்தர்ப்பத்தில் வேறு எவரும் உதவி செய்யாத சந்தர்ப்பத்தில் இந்தியா உதவியதாகவும் ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு உதவ வாய்ப்பு கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாகவும் அவசியமான நேரத்தில் 4.5 பில்லியன் டொலர் ரூபாயை வழங்கி இலங்கை பொருளாதாரத்துக்கு உதவியதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார். (அ)

## பொதுத்...

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் 70 உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய மற்றும் 1981 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் விடயதானங்களுக்கு அமைய 9ஆவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளவர்கள் 2024.10.04 ஆம் திகதி முதல் 2024.10.11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும். இதற்கமைய 2024.11.14 ஆம் திகதி வியாழக்கிழமை பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் 10 ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வை 2024.11.21 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்துவதற்கும் தீர்மானித்து ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு அமைய தேர்தல் பணிகளை முன்னெடுப்போம். ஜனாதிபதித் தேர்தலிலேபோது அரச சொத்துகள் பயன்பாடு தொடர்பில் வெளியிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் நிருபங்கள் பொதுத் தேர்தலுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

பொதுத்தேர்தல் தொடர்பான சுற்றறிக்கைகளை வெளியிடவுள்ளோம். 2023 ஆம் ஆண்டு 03ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்துக்கு அமைவாகவே பொதுத் தேர்தல் நடத்தப்படும். பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 5 நாட்களுக்கு பின்னர் தேர்தல் செலவினங்கள் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவோம்.

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடத்தப்பட்டது. எவ்வித பாரதூரமான சம்பவங்களும் பதிவாகவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு வழங்கிய ஒத்துழைப்பை பொதுத்தேர்தலுக்கும் வழங்குமாறு அரச துறைகளிடமும், நாட்டு மக்களிடமும் வலியுறுத்துகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## தியாகதீபம்...

பொறுப்பாளரான திலீபன் இந்திய அமைதிப்படை காலத்தில் 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி காலை, தண்ணீரை தவிர்த்து உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார். அவரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 1987 செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்நீத்தார்.

இந்நிலையில், 37ஆவது நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. பிரதான நினைவேந்தல் நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத்தூபியில் நடைபெற்றது. திலீபன் உயிர்நீத்த நேரமான முற்பகல் 10.48 மணிக்கு மாவீரர்களின் சகோதரியும் முன்னாள் பெண் போராளியும் நினைவுச்சுடரை ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் தாயார திலீபனின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்து இரு இளைஞர்கள் தூக்குக்காவடி எடுத்து திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்து, பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகம், தீவகம் வேலணையிலுள்ள நினைவுத்தூபி, மட்டக்களப்பு - கல்லடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய இடங்களிலும் நேற்று தியாகதீபத்துக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. (ஐ)

# மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி இளம் குடும்பஸ்தர் பரிதாபமாக பலி!

யாழ்ப்பாணம், செப். 27

மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி பகுதியை சேர்ந்த பாலசேகர் ஹரிபிரசாத் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவில் உள்ள கோவில் ஒன்றுக்கு நாதஸ்வர கச்சேரிக்கு சென்றுள்ளார். பின்னர் 16ஆம் திகதி வீட்டுக்கு வந்து கொண்டு இருந்தவேளை சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றின் மதில் மீது மோதி விபத்துக்குள்ளானார்.

இந்நிலையில் அம்புலன்ஸிற்கு அறிவித்தல் வழங்கிய நிலையில் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரே அம்புலன்ஸ் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் மாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# விபத்தில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 27

வட்டுக்கோட்டை அராலி பாலத்தடியில், நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில், முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அராலியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள், காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான வீதிக்குள் நுழைந்தது. அச்சமயம் காரைநகர் - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் அரச பேருந்தும், தனியார் பேருந்தும் போட்டி போட்டுச் சென்ற நிலையில், மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர் மீது, அரச பேருந்து மோதி விபத்து இடம்பெற்றது.

இதனால் படுகாயமடைந்த முதியவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவ...

இராணுவ புலனாய்வாளர்கள் சி. ஐ. டியினரை தவறாக வழிநடத்தினர்கள் என்று தெரிவித்துள்ள அவர் புலனாய்வு அமைப்புகளுக்கும் தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கும் இடையில் நிதித் தொடர்புகள் காணப்பட்டிருக்கலாம்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி 250 பேரை பலிகொண்ட தாக்குதல் தனித்த ஒரு சம்பவமல்ல. நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின்போது இராணுவ புலானய்வு பிரிவினர் இரண்டு தடவை விசாரணையாளர்களை தவறாக வழிநடத்த முயன்றனர்.

தெகிவளையில் உயிரிழந்த தற்கொலை குண்டுதாரி தொடர்பாக இராணுவ புலனாய்வு பிரிவினர் தவறாக வழிநடத்தினர்கள். அந்த தற்கொலை குண்டுதாரிக்கு இராணுவ புலனாய்வாளர்களுடன் தொடர்பிருக்கலாம் - இது மறைக்கப்பட்டது.

இரண்டாவதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் இடம்பெற்ற வவுணதீவு படுகொலைகளை (2018) விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என இராணுவப் புலனாய்வு பிரிவினர் குற்றஞ்சாட்டினார்கள், தங்களின் கதையை வலுப்படுத்துவதற்காக இராணுவ சீருடையை அங்குமறைத்து வைத்த னர்.

ஏப்ரல் 25ஆம் திகதி இந்த படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை சி. ஐ. டியினர் ஆயுதங்களுடன் கைதுசெய்த பின்னரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமான சஹ்ரான் ஹாசிம் குழுவினர் இந்த கொலையுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பது தெரிய வந்தது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த புலனாய்வு பிரிவின் உயர் அதிகாரியொருவர், தாக்குதலை மேற்கொண்ட குழுவினருக்கு தாக்குதலுக்கு இலங்கையின் புலனாய்வு பிரிவினர் நிதி உதவி செய்தனர். இது குறித்து முழுமையாக விசாரணைகளை மேற்கொள்ளவேண் டும்.

வவுணதீவு கொலையை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என நான்கு தடவை இராணுவப் புலனாய்வாளர்கள் தவறாக வழிநடத்தினார்கள். இதற்கான நோக்கம் என்ன - என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

## சங்கு...

இந்த நாட்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமது தேர்தல் ஏற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.கே. சிவாஜிலிங்கம், என்.சிறிகாந்தா மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (அ)

## சாதாரண...

வருவதாக அவர் குறிப்பிட்டார்.

452,979 விண்ணப்பதாரர்கள் பங்குபற்றிய இந்த ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 3,527 நிலையங்களில் நடை பெற்றது.

387,648 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65,331 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்கு தோற்றினர்.

பெறுபேறுகள் வெளியானதும் doenets.lk மற்றும் results.exams.gov.lk ஆகிய இணையத்தளங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

## வாக்காளர்...

தெரிவிக்கையில் -

தொகுதிகளின் எண்ணிக்கையிலோ மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையிலோ எந்தவித மாற்றமும் ஏற்படாது. ஆனால் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் தலா ஒருவர் வீதம் குறைக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் தலா ஒருவர் வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய அனைத்துத் தொகுதிகளிலும் எந்த மாற்றமும் ஏற்படாது.

அந்த வகையில் நோக்கும் போது வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்படும். கடந்த காலத்திலும் அத்தகைய மாற்றங்கள் இம்பெற்றுள்ளன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# அரச ஊழியர் சம்பள பிரச்னைக்கு புதிய அரசு தீர்வு காணவேண்டும்!

## ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை



கொழும்பு, செப். 27

**அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தபால்மூல வாக்களிப்புக்கு ஓரிருநாள் இருக்கும்போது அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

சம்பள அதிகரிப்புக்கான கோரிக்கையை முன்வைத்து நாம் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தினோம். அந்த சந்தர்ப்பத்தில் எம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் தேர்தலை மையமாகக் கொண்டு கடந்த அரசாங்கத்தினால் அவ்வாறான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்னைக்கு தற்போதைய அரசாங்கம் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். நாம் ஒருபோதும் கட்சி சார்ந்து எமது தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை.

அரச ஊழியர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே வாழ்க்கையை கொண்டுசெல்கிறார்கள். ஆதலால் இந்த விடயத்தில் அரசாங்கம் அக்கறைகொள்ள வேண்டும் - என்றார். (அ)

# உயர்தரப் பரீட்சைக்குப் பாதிப்பின்றி பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை!

கொழும்பு, செப். 27

பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்குக் குறுகிய காலப்பகுதியே காணப்பட்டாலும் அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக வுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

# கடந்த அரசில் நடந்த மோசடி குறித்து ஜனாதிபதி அநுர தலையிட வேண்டும்

கொழும்பு, செப். 27

சோள இறக்குமதியில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அகில இலங்கை முட்டை வியாபாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் அச் சங்கத்தின் தலைவர் அன்ரனி சாந்த அப்புஹாமி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த மஹிந்த அமரவீர மூன்று இலட்சம் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை பெற்றிருந்தார்.

எனினும் அவற்றில் பெரும் பங்கு தனி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. சோளத்தைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்வதன் ஊடாக கோழித் தீவனத்தின் விலையும் குறைவடையும். இதன்போது முட்டையை மேலும் குறைந்த விலைக்கு சந்தையில் விற்கக் கூடியதாக இருக்கும்.

ஆயினும் கடந்த அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய மோசடியால் முட்டைகளின் விலையை குறைக்க முடியாமல்போயுள்ளது.

புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்த விடயத்தில் நேரடியாக தலையிட்டு பிரச்னையை தீர்ப்பார் என எதிர் பார்க்கிறோம் - என்றார். (அ)

# பிரித்தானியப் பிரஜை கஞ்சாவுடன் கைது

கொழும்பு, செப். 27

பிரித்தானியப் பிரஜை ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில், கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதான பிரித்தானியப் பிரஜை ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பேங்கொக் நகரத்தில் இருந்து நேற்று காலை 9.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அதன் பின்னர் விமான நிலைய சோதனை நடவடிக்கை நிறைவடைந்து விமான நிலையத்தை விட்டு வெளியேற முற்பட்ட வேளை, மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன் போது, சந்தேக நபர் கொண்டுவந்த பயணப் பொதிகளில் இருந்து 43 கிலோ 648 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன் பெறுமதி, 43 கோடி 64 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டது.

அதனையடுத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால், சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

## காட்டுக்கு தீ வைத்தவர் கைது

கொழும்பு, செப். 27

கடந்த 24 ஆம் திகதி எல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்டு பகுதிக்கு தீ வைத்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் மேலும் ஒரு காட்டுப் பகுதிக்கு தீ வைக்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எல்ல கினலன் தோட்டத்தை சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் காடுகளுக்கு தீ வைப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 24 ஆம் திகதி கினலன் தோட்ட வனப்பகுதி ஏற்பட்ட காட்டு தீயினால் சுமார் 15 ஏக்கர் காடு எறிந்து நாசமாகி உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## மீனவர்களுக்கு எரிபொருள் மானியம்!

கொழும்பு, செப். 27

மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்படி எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீனவ மக்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் மூலம் பல நாள் மற்றும் ஒரு நாள் கப்பல் பயணங்களுக்கு எரிபொருள் மானியம் மாதந்தோறும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மேலும் மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மானியம் செலுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 4 கிலோகிராம் கஞ்சாவுடன் இளைஞர்கள் இருவர் கைது!

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனையிறவு பகுதியில் நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 4 கிலோ கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த குறித்த இருவரையும் சோதனை செய்தபோதே 4 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, திருமுறிகண்டி பிரதேசத்தை சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பதில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பிரியந்த வீரசூரிய?

கொழும்பு, செப். 27

புதிய அரசாங்கத்தின் கீழ் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக அரசாங்க உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

36 வருடங்களாக பொலிஸ் திணைக்களத்தில் தொடர்ந்து சேவையாற்றிய இவர், பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியிலிருந்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவி வரை பல்வேறு மட்டங்களில் சேவையாற்றியவர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரியாகவும்,

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணியாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான பிரியந்த வீரசூரிய மற்றும் லலித் பதிநாயக்க ஆகியோர் முன்மொழியப்பட்டதாகவும் அவர்களில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்படவுள்ளதாகவும் அரசாங்க வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (அ)

## லொறி - மோ.சைக்கிள் விபத்து 3 பிள்ளைகளின் தாய் மரணம்

காத்தான்குடி, செப். 27

லொறி - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் காத்தான்குடி அப்றார் நகர் வீதியைச் சேர்ந்த 48 வயதான பெண் ஒருவரே சம்பவ இடத்தில் பலியானார்.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பிரதான வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த போதே கல்லடி பகுதியில் வைத்து இந்த விபத்து இடம்பெற்றதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் லொறியின் சாரதியை காத்தான்குடி பொலிஸார் கைது செய்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கட்சி தாவினார் திலும் அமுனுகம

கொழும்பு, செப். 27

பொதுஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம, மௌபிம ஜனதா கட்சியுடன் இணைந்துள்ளார்.

இவ்வாறு கட்சி மாறிய அவருக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான நியமனக் கடிதத்தை மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர நேற்று வழங்கினார்.

ஜனாதிபதித் தேர்தலில் திலும் அமுனுகம, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.